# குரு என்பவர் யார்

ஓம்

**குருவை பற்றி குரு கீதை கூறுவதாவது**

கு (Gu) இருளைக் குறிக்கும் ரு (Ru) ஒளியைக் குறிக்கும். இருள் எனும் அஞ்ஞானத்தை ஒழிக்கும் பேராற்றலே குரு. குரு பிரம்மனாகவும், விஷ்ணுவாகவும் மகேஸ்வரனாகவும் இருக்கிறார். குரு என்றால் பேராற்றல். இந்த பேராற்றல் நமது எண்ணங்களை நாம் உணர ஒரு சங்கிலி போல் நம்மை பிணைக்கிறது. பல ஆசான்கள், வழிகாட்டிகள், முன்னோடிகள் வழி மேலுலகத்திலும் பூமியிலும் குருவின் தத்துவங்கள் பிரகாசிக்கின்றன

குருவைப் போல் நானும் ஒரு உதாரண புருஷராக ஆக விரும்புகிறேன். குரு ஒரு விஷயத்தை கட்டளை இடுபவராகவும், அதை மிகைபடுத்தி, வெளிப்படுத்துவதோடு, உதாரணமாக செய்தும் காட்டுவார். குரு நம்மை மென்மேலும் முயற்சி செய்து முன்னேற உற்சாகப்படுத்துவார்.

ஓம்

**குருர் பிரம்மா**

**குருர் பிரம்மா, குருர் விஷ்ணு குருர்தேவோ மகேஸ்வர:**

பிரம்மனாகவும், விஷ்ணுவாகவும் மகேஸ்வரனாகவும் குரு சித்தரிக்கப்படுகிறார். அதாவது என் குரு பிரம்மன் விஷ்ணு, சிவபெருமான் என்பவர். உங்கள் குரு பிரம்மாவாகவும், விஷ்ணுவாகவும் சிவனாகவும் இருப்பர். எல்லா குருமார்களும் பிரம்மாவாகவும், விஷ்ணுவாகவும் சிவனாகவும் விளங்குவர் எனது குருவைப் போல்.

எமது குரு பிரம்மா, எல்லா குருமார்களும் பிரம்மாவே
பிரம்மா எமது குரு
எமது குரு விஷ்ணு, எல்லா குருமார்களும் விஷ்ணுவே
விஷ்ணு எமது குரு
எமது குரு சிவன், எல்லா குருமார்களும் சிவனே
சிவன் எமது குரு

குருவாகிய பிரம்மா, விஷ்ணு, சிவா அருவமாகவும் உருவமாகவும் என் உள்ளும் வெளியிலும், எங்கும் நிறைந்திருக்கிறார். அதனால் நாம் குருவை பய பக்தியுடன் வணங்குவோம். குருவுடன் நமக்குள்ள உறவை கொண்டாடுவோமாக!